# S.C. No. 226 / 2018

# 10.01.2023

**அ.த.சா.6, டாக்டர். முத்துநாராயணன், த/பெ. தர்மலிங்கம், வயது 60**

சாட்சி சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து கடந்த 31.07.2022 அன்று அரசுப் பணியிலிருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். மேலும் அப்பணியில் கடந்த 19.01.2013 அன்று மதியம் 3 மணியளவில் நான் பணியிலிருந்த போது சூசை அருள், ஆண், வயது 63 என்பவரை அவரது மகன் திரு. அன்டோனி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். மேற்படி நபர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரது கூற்றின்படி தன்னை 19.01.2013 அன்று காலை 11.30 மணியளவில் எலாவூர், துராப்பள்ளம் கிராமத்தில் வைத்து 3 தெரிந்த நபர்கள் மற்றும் 12 தெரியாத நபர்களால், கடப்பாறை மற்றும் மண்வெட்டியால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்து பார்த்ததில் சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவர் தனக்கு மார்பு மற்றும் வலது தோள்பட்டை வலிப்பதாக கூறினார். எனவே நான் விபத்து பதிவேடு பதிவு செய்து மேல் சிகிச்சைக்காக வார்டு எண் 9 -ல் உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரை செய்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மார்பு மற்றும் தோள்பட்டை வலி ஏற்படுவது வாயுக் கோளாறினால் ஏற்படுவதற்கும் வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

# S.C. No. 226 / 2018

# 10.01.2023

**அ.த.சா.7, திரு. பழனி, த/பெ. சுப்பிரமணி ஐயர், வயது 54**

சாட்சி சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆரம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். தாவா வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 2013 ஆம் வருடம் என்னிடம் ஒரு வழக்கு சம்பந்தமாக ஆரம்பாக்கம் காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாம் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ- 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை பரிசீலிக்க அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது போலீசார் விசாரணையில் கடந்த 19.01.2013 அன்று காலை 11.30 மணியளவில் எனது பக்கத்து நிலத்தின் உரிமையாளர் சூசை அருளை ஆஜர் எதிரிகள் தாக்கினார்கள் என்று கேள்விபட்டேன் என்றும், சம்பவயிடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படத்தை என் முன்னிலையில் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றும், தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி அவர்களுக்கு பவ்வியப்பட்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**